கருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி–கருணை அடிப்படையில் பணி நியமனம்– திரு இரா.பிரகாஷ், (த/பெ.காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு கே.இராமமூர்த்தி)– கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (2ப) எண். 38

நாள் : 01.07.2020
சார்வரி, ஆனி : 17
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, கோயம்புத்தூர் மண்டலம் அவர்களின் கடிதங்கள் எண். ஆட்சி 1(2)/9387/2019, நாள் 12.11.2019 மற்றும் 17.03.2020.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.

------

ஆணை:–

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கோயம்புத்தூர் மண்டலத்தைச் சார்ந்த ஆழியார் வடிநில உபகோட்டம், நீர்வள ஆதாரத்துறை பொங்கலூர் அலுவலகத்தில் மஸ்தூர் (பணியாளர் சிறப்பு நிலை) ஆகப் பணிபுரிந்து வந்த திரு கே.இராமமூர்த்தி அவர்கள், அரசுப் பணியிலிருக்கும் போது கடந்த 13.11.2007 அன்று காலமானதையடுத்து, அவரது வாரிசுதாரர்/ மனைவி திருமதி ஆர்.விஜயலட்சுமி அவர்கள் தமது மகன் திரு இரா.பிரகாஷ் அவர்களுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கக் கோரி 25.06.2008 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டதின் பேரில், முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் பொதுப்பணித் துறையில் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக திரு இரா.பிரகாஷ் அவர்களுக்கு பணி நியமனம் அளிக்கப்பட்டு, கோயம்புத்தூர் மண்டலத்தைச் சார்ந்த கண்காணிப்புப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, சிறப்புத் திட்ட வட்டம், பழனியின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அமராவதி வடிநில கோட்டம், தாராபுரம் அலுவலகத்தில் பணியாற்றி வருகிறார் என்றும் தெரிவித்து, பணிவரன்முறைக்குத் தேவைப்படுகின்ற சான்றாவணங்களை அனுப்பி வைத்து, தனியரின் பணியினை அவர் பணியேற்ற நாளான 30.08.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, கோயம்புத்தூர் மண்டலம் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பாக, ஒருங்கிணைந்த வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

4. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, கோயம்புத்தூர் மண்டலம் அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு கூர்ந்தாய்வு செய்தது. திரு. இரா.பிரகாஷ், இளநிலை உதவியாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ள நிலையில், அவரது பணியினை அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பொதுப்பணித் துறையில், கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நாளான 30.08.2018 முற்பகல் முதல், இளநிலை உதவியாளர் பதவியில், பணி நியமனத்திற்குரிய உரிய தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன் நாளிட்டு பணிவரன்முறை செய்வதால், ஊதிய உயர்வு/ ஊதிய நிலுவை இருப்பின் தனியர் அவற்றைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அ.சா.எண்.7703 /கு.பு.2/2020-1, நாள் 18.06.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அ.சா.எண்.14822/ஜி2/2020-1, நாள் 20.06.2020-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.மணிவாசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை,கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர்-1.
திரு. இரா.பிரகாஷ் , இளநிலை உதவியாளர்,
(தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை,கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர்-1 வழியாக)
முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை-5.
மாநில கணக்காயர், சென்னை -18.

நகல்:
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை /
பணியாளர் மற்றும் நிருவாகச்சீர்திருத்தத்துறை, சென்னை- 9.
இருப்பு கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்